1992 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்ன சாமி.

திரு. வி. கே சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் எங்கள் பகுதிக்கு வந்தபோது, கீழ்பவானி ஆயக்கட்டு விவசாயிகள் கடலை பயிரை பறித்து எடுப்பதற்கு இன்னும் ஒரு வார காலத்திற்கு கண்டிப்பாக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்ட நேரத்தில், மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அவர்களோடு கலந்து, மேலே குந்தாவிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு நிச்சயமாக இந்தப் பயிர்களைப் பறிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, நம்முடைய இதய தெய்வம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி, அது பொதுப்பணித்துறை அமைச்சர் செய்ய வேண்டிய வேலை. அவர் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் இப்போது முன் மொழிந்து பேசிக்கொண்டு இருப்பது மின்சாரத்துறை மீது இருக்கிற நிதிநிலை அறிக்கை பற்றி. ஆகவே, அது இப்போது வராது. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களும் என்னிடம் பேசி இருக்கிறார்கள். மின்சார வாரிய தலைவரோடு கலந்து பேசி விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத அளவிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சட்டமன்றப் பேரவையின் 30, 130 மற்றும் 132 ஆவது விதிகளைத் தளர்த்துவது பற்றிய தீர்மானத்தை முன்மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1992ஆம் ஆண்டு இந்திய முத்திரை தமிழ்நாடு இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தல்)

இந்திய முத்திரை, தமிழ்நாட்டு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு,

1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்)சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்).

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 5-5-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS